மலர் : 11 இயேசுகிறிஸ்துவே கர்த்தர் இதழ் : 5

தனிப்பிரதி ரூ. 3

# HUNDRED VILLAGE MINISTRY

ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி

हन्ड्रड विलज मिनस्ट्री

ഹണ്ഡ്റഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി

## மார்ச் 2011

ஆண்டுசந்தா இந்தியா ரூ.25 வெளிநாடு ரூ. 250

# 100- கிராம ஊழியம்

TAMIL VILLAGE GOSPEL MISSION – மாதாந்திர அறிக்கை




**TVGM - 2011 மார்ச்**
**கர்த்தரின் வாக்குத்தத்தம்**

**ஐசுவரியத்தையும்**
**சம்பத்தையும்**
**கனத்தையும்**
**உனக்குத் தருவேன்.**

2 நாளாகமம் 1 : 12

**நீங்களும் கர்த்தருக்காக ஒரு ஆலயத்தைக் கட்டலாமே?**

**மொன்னவேடு ஜெபவீடு**



தேவனுடைய மகிமைக்கென்று

**1.மொன்னவேடு கிராமம்**

**2.காஞ்சி – வல்லம்**

ஜெபவீடுகளை 19.01.11 அன்று

**Rev. அருமைநாதன்**

பிரதிஷ்டை செய்தார்கள்.

**நன்றி :**

*Yishun Evangelical Church*

Bishop Joseph Jabemany

# இயேசுகிறிஸ்துவே கர்த்தர்



P.T. **கிறிஸ்டோபர்**
TVGM ஸ்தாபகர்



**ஸ்டீபன் கிறிஸ்டோபர்**
மேனேஜிங் டிரஸ்டி

*கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே !*

*நமது கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள் !*

*கர்த்தருடைய கிருபையினால்* TVGM *மற்றும்* TASOL *ஊழியங்கள் ஆசீர்வாதமாக நடைபெற்று வருகின்றன.*

***2011*** *ஜனவரி மாதத்தில் இரண்டு ஜெபவீடுகளை தேவனுடைய மகிமைக்கென்று பிரதிஷ்டை செய்ய கர்த்தர் கிருபை செய்தார். தேவனைத் துதியுங்கள்.*

TVGM *ஊழியங்கள் மூலமாக நடைபெறும் ஆலயம் கட்டும் திட்டங்களுக்காக ஜெபியுங்கள். உங்கள் குடும்பத்தின் சார்பாக* TVGM *மூலம் ஒரு ஆலயம் கட்ட ஜெபித்து சிந்தியுங்கள்.*

*மேலும்* TASOL *திட்டங்களுக்காக ஜெபியுங்கள். அதன் மூலமாக சில ஏழை மாணவர்களின் படிப்பிற்காக உதவி செய்து வருகிறோம்.* TASOL *ன் எதிர்கால திட்டத்திற்க்காக நிலம் வாங்குவதற்கு சில பங்காளர்கள் தேவைப்படுகிறார்கள். ஜெபித்து சிந்தியுங்கள்.*

*நமது சிறுவர் இல்லப் பிள்ளைகள் நன்கு படிக்கவும், கிறிஸ்துவில் வளரவும் ஜெபியுங்கள்.*

*நீங்கள் தொடர்ந்து எங்களுக்காக ஜெபித்து செய்து வரும் உதவிக்காக நன்றி !*

*கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக !*

***கிறிஸ்துவின் பணியில்,***

02.02.2011 P. T. கிறிஸ்டோபர் & ஸ்டீபன் கிறிஸ்டோபர்.

# ஐசுவரியத்தையும் சம்பத்தையும் கனத்தையும் உனக்குத் தருவேன். 2 நாளா. 1 : 12.

[ வாக்குத்தத்த செய்தி : சகோ. P.T. கிறிஸ்டோபர் ]

**ஜெபம்**

**இயேசுவே ! ஞானத்தையும் அறிவையும் தாரும்.**

## கேட்ட ஆசீர்வாதமும் கிடைக்கும் !
## கேளாத ஆசீர்வாதமும் கிடைக்கும் !

கர்த்தருடைய வாக்குத்தத்தத்திற்காக ஆவலோடு காத்திருக்கும் என் அன்பு சகோதரனே ! சகோதரியே ! தேவஊழியரே!

**ஐசுவரியத்தையும், சம்பத்தையும், கனத்தையும் உனக்குத் தருவேன்** என திரியேக தேவன் வாக்களிக்கிறார்.

**1நாளா.29:26–28** ஈசாயின் குமாரனாகிய தாவீது இஸ்ரவேல் அனைத்துக்கும் ராஜாவாயிருந்தான்.

அவன் இஸ்ரவேலை அரசாண்ட நாட்கள் நாற்பது வருஷம்.

அவன் தீர்க்காயுசும் ஐசுவரியமும் மகிமையுள்ளவனாய், நல்ல முதிர் வயதிலே மரணமடைந்த பின், அவன் குமாரனாகிய சாலொமோன் அவன் ஸ்தானத்திலே அரசாண்டான்.

**2 நாளா.1:1** தாவீதின் குமாரனாகிய சாலொமோன் தன் ராஜ்யத்திலே பலப் பட்டான். அவனுடைய தேவனாகிய கர்த்தர் அவனுடனே இருந்து அவனை மிகவும் பெரியவனாக்கினார்.

**2 நாளா. 1 : 6** சாலொமோன் ஆசரிப்புக் கூடாரத்திற்கு முன்பாகக் கர்த்தரின் சந்ததியிலிருக்கிற வெண் கலப் பலிபீடத்தின்மேல் ஆயிரம் சர்வாங்க தகனபலிகளைச் செலுத்திப் பலியிட்டான்.

**2 நாளா. 1 : 7** அன்று ராத்திரியிலே தேவன் சாலொமோனுக்குத் தரிசன மாகி: **நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள்** என்றார்.

**2 நாளா. 1 : 8** சாலொமோன் தேவனை நோக்கி: தேவரீர் என் தகப்பனாகிய **தாவீதுக்குப் பெரிய கிருபை செய்து,** என்னை **அவன் ஸ்தானத்திலே ராஜாவாக்கினீர்.**

**2 நாளா. 1 : 9** இப்போதும் தேவனாகிய கர்த்தாவே, நீர் என் தகப்பனாகிய தாவீதுக்கு அருளின உமது **வாக்குத்தத்தம்** உறுதிப் படுவதாக; தேவரீர் பூமியின் தூளத் தனை ஏராளமான ஜனத்தின்மேல் என்னை ராஜாவாக்கினீர்.

**2 நாளா. 1 : 10** இப்போதும் நான் இந்த ஜனத்திற்கு முன்பாகப் போக்கும் வரத்துமாயிருக்கத்தக்க **ஞானத்தையும் அறிவையும் எனக்குத் தந்தருளும்;** ஏராளமாயி ருக்கிற, இந்த உம்முடைய ஜனத்தை நியாயம் விசாரிக்கத்தக்கவன் யார்? என்றான்.

**2 நாளா. 1 : 11** அப்பொழுது தேவன் சாலொமோனை நோக்கி: இந்த விருப்பம் உன் இருதயத்தில் இருந்த படியாலும், நீ ஐசுவரியத்தையும் சம்பத்தையும் கனத்தையும், உன்

பகைஞரின் பிராணனையும், நீடித்த ஆயுசையும் கேளாமல், நான் உன்னை அரசாளப் பண்ணின என் ஜனத்தை நியாயம் விசாரிக்கதக்க **ஞானத்தையும், விவேகத்தையும்** நீ கேட்டபடியினாலும், ஞானமும் விவேகமும் தந்திருக்கிறது மல்லாமல், உனக்கு முன் இருந்த ராஜாக்களுக்காகிலும் உனக்குப் பின் இருக்கும் ராஜாக்களுக்காகிலும் இல்லாத **ஐசுவரியத்தையும், சம்பத்தையும் கனத்தையும் உனக்குத் தருவேன்** என்றார்.

எனக்கு அன்பானவர்களே!

இந்த ஆசீர்வாதத்தை கர்த்தர் உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும், பின்வரும் சந்ததிக்கும் கட்டளையிடுவாராக.

இந்த ஆசீர்வாதத்தை சுதந்தரித்துக் கொள்ள சாலொமோன் செய்த காரியங்களை சற்று தியானிப்போம்.

**முதலாவதாக**

**சாலொமோன், தன் தகப்பன் ஸ்தானத்திலே அரசாண்டான்.**

இன்று பிள்ளைகள் தகப்பன் செய்த ஊழியத்தை எடுத்து நடத்துவதற்கு முன்வருவதில்லை. ஏனெனில், பெற்றோர் ஊழியத்தில் படுகிற பாடுகளை பிள்ளைகள் கவனித்துக் கொண்டேயிருக்கிறார்கள்.

**1.**தகப்பன், தன் மனைவி பிள்ளைகளோடு செலவிடும் நேரம் மிகவும் குறைவு. எல்லா நேரமும் ஊழியத்திற்கே போய் விடுவது.

**2.** தங்கள் சொந்த குடும்ப வருமானம் மிகக் குறைவு.

**3.** மற்ற ஆத்துமாக்களுக்காக உதவி செய்ய எடுக்கிற பிரயாசங்கள் மிக மிக அதிகம். இதினால் சரீர சுகத்தை இழக்கிறார்கள்.

**4.** ஊழியத்தில் உள்ளூர் போதகராலும், மற்றவர்க ளாலும் நிந்திக்கப்படுவது.

**5.** செய்த நன்றியை மறந்து தூற்றிக் கொண்டே செல்பவர்கள்.

**6.** அரசாங்க அதிகாரிகளோடு போராட்டம். (லஞ்சம், காலவரையற்ற அலைச்சல்)

**7.**சத்துருவின் போராட்டங்கள். இன்னும் பல ...

இப்படியான பல காரியங்களைப் பார்க்கும்போது, பிள்ளைகள் தகப்பன் செய்கிற ஊழியத்தைச் செய்ய விரும்புவதில்லை.

தாவீது தன்னுடைய வாழ்க்கையில் எப்பொழுதும் யுத்த வீரனாக இருக்கிறார். எப்பொழுதும் இரத்தம் சிந்துகிற காரியத்தில் ஈடுபடுகிறார்.

ஆதலால் தான், எருசலேம் தேவாலயத்தை நீ கட்ட வேண்டாம் உன் மகன் கட்டுவான் என்றார்.

இதையெல்லாம் சாலொமோன் கவனித்துக் கொண்டே இருந்திருப்பார். ஆனாலும் சாலொமோன் தகப்பனுடைய ஊழியத்தை வெறுக்கவில்லை.

வேதம் சொல்கிறது : **1நாளா.29:28**

**சாலொமோன் தன் தகப்பன் ஸ்தானத்திலே அரசாண்டான்.**

என் அன்பு கர்த்தருடைய பிள்ளைகளே!

உங்கள் ஊழிய ஸ்தானத்தில் **உங்கள் பிள்ளைகளே** எழும்ப வேண்டும் என வாழ்த்துகிறேன்.

**சங்கீதம் 128 : 6**

**உன் பிள்ளைகளின் பிள்ளைகளையும், இஸ்ரவேலுக்கு உண்டாகும் சமாதானத்தையும் காண்பாய்.**

ஆதலால் நீங்கள் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினாலே கழுவப் பட்டு, அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தை பிரஸ்தாபப் படுத்தி, ஆத்துமாக்கள் சமாதானமான வாழ்க்கை வாழ வழி செய்ய வேண்டும்.

## இரண்டாவதாக

**சாலொமோன் தன் ராஜ்யத்திலே பலப்பட்டான்; அவனுடைய தேவனாகிய கர்த்தர் அவனுடனே இருந்து அவனை மிகவும் பெரியவனாக்கினார்.**

சாலமோன் பலப்பட்டான். பெரியவனானான் **யாரால் ?**

**தேவனாகிய கர்த்தர் அவனுடனே இருந்தார்.**

சங்கீதம் 23 : 4 ல் **தாவீது கூறுகிறார்:**

**தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர்.**

என் அன்பு பெற்றோர்களே! தாவீதின் அறிக்கை உங்கள் பிள்ளைகளின் அறிக்கையாக மாறட்டும்.

**சங்.34:1** கர்த்தரை நான் எக்காலத் திலும் ஸ்தோத்தரிப்பேன்; அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும்.

**சங்.16:8** கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்; அவர் என் வலதுபாரிசத்தில் இருக்கிற படியால் நான் அசைக்கப்படுவதில்லை.

**சங்.138:8** கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார்.

**சங்.23:1** கர்த்தர் என் மேய்ப்பரா யிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன்.

**ஏன் இவ்வாறு அறிக்கை செய்ய வேண்டும் ?**

**நீதி. 28:25** கர்த்தரை நம்புகிறவனோ செழிப்பான்.

**சங்.34:10** கர்த்தரைத் தேடுகிறவர் களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது.

**சங். 19:9**கர்த்தருக்குப் பயப்படுகிற பயம் சுத்தமும், என்றைக்கும் நிலைக்கி றதுமாயிருக்கிறது.

## மூன்றாவதாக

**சாலொமோன் ஆசரிப்புக் கூடாரத்திற்கு முன்பாக ஆயிரம் சர்வாங்க தகனபலிகளை செலுத்தினான்.**

நீங்களும் தினமும் **ஆயிரம் ஸ்தோத்திரபலிகளை** தேவனுக்கு செலுத்துங்கள். உங்கள் பிள்ளை களையும் பழக்குவியுங்கள்.

வேதம் சொல்கிறது : **சங். 50 : 23**

**ஸ்தோத்திர பலியிடுகிறவன் என்னை மகிமைப்படுத்துகிறான்.**

**ஆகாய் 1 : 8**

**ஆலயத்தைக் கட்டுங்கள்; அதின்பேரில் நான் பிரியமாயிருப்பேன், அதினால் என் மகிமை விளங்கும்.**

இந்த வசனத்தின்படி பின்வரும் நாட்களில் சாலொமோன் ஆலயத்தை கட்டுகிறான். தேவனுடைய நாமம் மகிமைப்படுகிறது.

ஸ்தோத்திரபலியானது ஆலயத்தைக் கட்டும் பணியில் முடிவடைகிறது.

இதே கிருபையை கர்த்தர் உங்களுக்கும், உங்கள் பிள்ளைக ளுக்கும் கட்டளையிடுவாராக.

**சாலொமோன் 1000 பலிகளைச் செலுத்தினான். நடந்தது என்ன ?**

## நான்காவதாக

**பலிகளின்மேல் பிரியமாயிருக்கிற தேவன் சாலொமோனுக்கு தரிசனமானார்.**

உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும் **தேவன் தரிசனம் அருளுவாராக.**

**ஆபகூக் 2 : 3** குறித்தகாலத்துக்குத் தரிசனம் வைக்கப்பட்டிருக்கிறது; முடிவிலே அது விளங்கும், அது பொய் சொல்லது; அது தாமதித்தாலும் அதற்குக் காத்திரு; அது நிச்சயமாய் வரும், அது தாமதிப்பதில்லை.

## ஐந்தாவதாக

**தேவன் சாலொமோனுக்கு தரிசனமாகி : நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள் என்றார்.**

எத்தனை பெரிய ஆசீர்வாதம்!

என் அன்பு தேவ ஊழியரே, ஸ்தாபன தலைவரே, விசுவாசியே!

உங்களைப் பார்த்து தேவன் சொல்கிறார் : **நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள்**

**தேவன் கொடுப்பதற்கு ஆயத்தம். நீங்கள் கேட்பதற்கு ஆயத்தமா?**

**யோவான் 16 : 24** இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை; கேளுங்கள் அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக் கொள்வீர்கள்.

## ஆறாவதாக

**என் தகப்பனுக்குப் பெரிய கிருபை செய்து அவர் ஸ்தானத்திலே என்னை ராஜாவாக்கினீர்.**

தகப்பனுக்கு கர்த்தர் செய்த பெரிய கிருபையையும், தன்னை தன் தகப்பன் ஸ்தானத்திலே ராஜா வாக்கினதையும் நினைவு கூர்ந்தார்.

**சங்.89:1** கர்த்தரின் கிருபைகளை என்றென்றைக்கும் பாடுவேன்.

## ஏழாவதாக

**என் தகப்பனாகிய தாவீதுக்கு அருளின உமது வாக்குத்தத்தம் உறுதிப்படுவதாக.**

தகப்பனுக்கு தேவன் கொடுத்த வாக்கை உறுதிப்படுத்த கெஞ்சுகிறார். பிள்ளைகளே! உங்கள் பெற்றோருக்கு தேவன் கொடுத்த வாக்குத்தத்தத்தை உங்களுக்கு சொந்தமாக்கிக் கொள்ளுங்கள். வாக்குத்தத்தமானது சந்ததி சந்ததியாக தொடரும்.

**பக்தன் பாடுகிறார் :**

***வாக்குத்தத்தம் செய்த கர்த்தரே***
***வாக்குமாறா உண்மை நாதரே***
***வாக்கை நம்பி வந்து நிற்கிறோம்***
***வல்ல ஆவி மாரி ஊற்றுமே.***

பாடுங்கள். பாடிக்கொண்டேயிருங்கள்.

7 காரியங்களை செய்த சாலொமோன் கர்த்தரை நோக்கி செய்த விண்ணப்பத்தைப் பாருங்கள்.

**தேவனாகிய கர்த்தாவே, இப்போதும் நான் இந்த ஜனத்திற்கு முன்பாகப் போக்கும் வரத்துமாயிருக்க தக்க ஞானத்தையும் அறிவையும் எனக்குத் தந்தருளும்.**

என் அன்பு கர்த்தருடைய பிள்ளையே!

இந்த மாதத்தில் கர்த்தர் உங்களுக்கு கொடுத்த ஊழியத்தை, குடும்பத்தை, வியாபாரத்தை நடத்த **ஞானத்தையும் அறிவையும் தேவனிடத்தில் கேளுங்கள்.**

அப்பொழுது தேவன் நீங்கள் கேளாத **ஐசுவரித்தையும் சம்பத்தையும் கனத்தையும் உங்களுக்குக் கொடுப்பார்.**

***கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!***

# புதுக்கோட்டை மாவட்டம் - ஆலங்குடி தாலுகா
# 100 - கிராம ஊழிய அறிக்கை

✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡

ஊழியம் நடைபெற்ற தேதி : ***17 . 01. 2011 முதல் 21. 01. 2011***

முதல்நாள், கடைசிநாள், கூடுமிடம், உணவு, இனிப்பு, பார்சல் செலவுகளை பொறுப்பெடுத்து உதவி செய்தவர் : ***பாஸ்டர் லாரன்ஸ்***

**இயேசுகிறிஸ்துவின் பேழை, ஆலங்குடி.**

முதல் நாள் ஜெபத்தில் தேவசெய்தி கொடுத்தவர் : ***பாஸ்டர் லாரன்ஸ்***

ஊழியம் செய்த கிராம ஊழியர்களின் எண்ணிக்கை : 46 **பேர்**

பிரிக்கப்பட்ட மொத்த குழுக்கள் : 11 **குழுக்கள்**

வழங்கப்பட்ட சுவிசேஷப் புத்தகங்கள் : 12,459 யோவான் சுவிசேஷங்கள்

இயேசுவே இரட்சகர் கைப்பிரதிகள் : 15,000

மற்ற கைப்பிரதிகள் : 5000

சிலுவைக்கொடிகள் : 10,000

புறமதநண்பர்களின் விலாசங்கள் : 141







## கிராம ஊழியர்களின் அனுபவ சாட்சிகள்

குழு 1 : சகோதரிகள் :- **ரூத் கலா, தேவகிருபை, கிருபா பழனியம்மாள், அன்னாள், ரெபேக்கா லட்சுமி.**

நாங்கள் சென்ற கிராமத்தில் பிசாசு அலைக்கழித்துக் கொண்டிருந்த 12 வயது சிறுவனை கிராம மக்கள் எங்களிடம் கொண்டு வந்து ஜெபிக்கும்படி கூறினார்கள். ஜெபித்தபோது, உடனே அந்தப் பிசாசு அவனை அலைக்கழித்து விட்டு போய் வி;டடது. **புதுக்கோட்டை விடுதி** என்ற கிராமத்தில் இரண்டு வாலிபர்கள் எங்களை வழிமறித்து யாரைக் கேட்டு இந்த ஊருக்கு வந்தீர்கள் ? யார் உங்களை அனுப்பினார்கள் என்று மிரட்டினார்கள். நாங்கள்

நாங்கள் இயேசு தான் எங்களை அனுப்பினார், இயேசுவைக் கேட்டுத் தான் இங்கே வந்தோம் என்று கூறினோம். அதற்கு அவர்கள் எங்களை விபச்சாரிகள் என்றும் இன்னும் எவ்வளவு மோசமான வார்த்தைகளால் திட்டமுடியுமோ அவ்வளவாய் திட்டி அவமானப்படுத்தினார்கள். யோவான் புத்தகம், கைப்பிரதிகளை பிடுங்கிக் கொண்டார்கள். அருகில் இருந்த விக்கிரகத்தின் காலை பிடித்து கும்பிடும்படி சொன்னார்கள். நாங்கள் அப்படிச் செய்யாமல் வைராக்கியமாகப் பேசினோம். இந்த நேரத்தில் 15 பேர் எங்களுக்கு ஆதரவாகப் பேச ஆண்டவர் இயேசு அனுப்பி வைத்தார். அவர்கள் எங்களுக்காக பரிந்து பேசி எதிர்த்தவர்களை அப்புறப்படுத்தினார்கள். நாங்கள் விடுதலையோடு வேறு கிராமங்களுக்கு சென்று ஊழியம் செய்தோம். மொத்தம் 1050 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 2 : சகோதரர்கள் :- மாற்கு மாரியப்பன், நோவா, மகாராஜன், ஜெபமலைநாதன், பீட்டர்.**

செட்டியாபட்டி, கும்மனம்பட்டி, வேப்பங்குடி, காயாம்பட்டி ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவித்து வீடுகள்தோறும் யோவான் புத்தகம் கொடுத்தோம். ஒருவரிடம் யோவான் புத்தகம் கொடுத்து உங்களுக்கு சமாதானம் என்று சொன்னோம். அவரோ நான் என்ன தப்பு செய்தேன். ஏன் இப்படி காலையிலே வந்து இந்தப் புத்தகத்தை கொடுக்கிறீர்கள் ? நான் இதை வாங்க முடியாது, உங்க இயேசு வேண்டாம், போங்கையா என்றார். மொத்தம் இப்பகுதிகளில் 1024 சுவிசேஷப் புத்தகங்கள், 850 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 3 : சகோதரகள் :- பால்ராஜ், அந்தோணி, தாவீது, ஆபிரகாம்.**

திருவரங்குளம் ஊராட்சியிலுள்ள கிராமங்களில் ஊழியம் செய்தோம். இரண்டாவது நாளில் எங்களுடன் ஊழியம் செய்த தாவீது என்பவருக்கு திடீரென்று காலை 5 மணிக்கு நெஞ்சுவலி ஏற்பட்டு மிகவும் வேதனைப் பட்டார். உடனே மருத்துவமனையில் சேர்த்தோம். முதல் இரண்டுநாட்கள் எங்கள் உடன் ஊழியர் கூடவே இருந்து பார்த்துக் கொண்டார். பின்பு அவரது மேல் சிகிச்சைக்காக அவரது மகன்கள் சொந்த ஊருக்கு அழைத்து சென்றனர். மீதியான நாட்களில் நாங்கள் ஊழியம் செய்து, மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 900 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 4 : சகோதரிகள் :- எஸ்தர், பிச்சையம்மாள், செல்லக்கனி, எஸ்தர் எபிநேசர்.**

நாங்கள் சென்ற கிராமங்களில் மக்கள் அன்போடு சுவிசேஷப் புத்தகங்களை வாங்கிக் கொண்டார்கள். பிரச்சனை உள்ளவர்களுக்காகவும், வியாதியஸ்தர்களுக்காகவும் ஜெபித்தோம். மொத்தம் 980 சுவிசேஷப் புத்தகங்கள், 900 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 5 : சகோதரிகள் :- லூயிஸ், ஜோதிமணி, சலோமி சம்மனசு, லூர்துமேரி.**

நாங்கள் ஊழியம் செய்து கொண்டு வரும்போது, ஒரு முஸ்லீம் பெண்ணிடம் இயேசுவைப் பற்றிக் கூறி சுவிசேஷப் புத்தகத்தைக் கொடுத்தோம். அந்த பெண், நாங்கள் மூத்தவர் பிள்ளைகள், நீங்கள் இளையவர் பிள்ளைகள். நீங்கள் பைபிள் படிக்கிறீங்க, நாங்கள் குர்ரான் படிக்கிறோம். எங்களுக்கு எல்லாம் தெரியும்

உங்கள் புத்தகம் வேண்டாம், போங்கள் என்றாள். **குளவாய்பட்டி** கிராமத்தில் எங்களைப் பார்த்த ஒரு வாலிபன் எல்லோரும் ஒரே மாதிரி பை போட்டுக் கொண்டு அலைகிறீர்களே, நீங்கள் யார் ? என்று கோபத்துடன் கேட்டான். நாங்கள் பதில் ஏதும் சொல்லாமல் கடந்து வந்தோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 950 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 6 : சகோதரிகள் :- வசந்தா, அன்னக்கிளி, கிளமெண்ட்ஸ்மேரி, பிரிஸ்கில்லா.**

நாங்கள் சென்ற கிராமங்களில் சுவிசேஷப் புத்தகங்களை பலர் வாங்க மறுத்தார்கள். இந்து மக்களை விட R.C கிறிஸ்தவர்கள் அதிகமான பேர் இருந்த கிராமங்களில் மத வைராக்கியமாக இருக்கிறார்கள். மொத்தம் 1050 சுவிசேஷப் புத்தகங்கள், 900 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 7 : சகோதரர்கள் :- பிரேம்ஆனந், செல்வராஜ், காபிரியேல், ஜெபராஜ்.**

**கல்லாளங்குடி** கிராமத்தில் ஒரு பெண் நாங்கள் கொடுத்த சுவிசேஷப் புத்தகத்தை பார்த்துவிட்டு, இங்கு அதை கொண்டு வராதே, தீட்டு என்று சொல்லி வாங்க மறுத்தாள். இவருக்கு இயேசுவின் அன்பையும், சிலுவை மரணத்தையும், மீட்பையும் எடுத்து சொன்னபோது, இந்த புத்தகத்தை வாங்க என்னிடம் ஒன்றுமில்லையே என்றாள். இலவசமாக தருகிறோம் என்று கொடுத்தபோது, ஆர்வமாக வாங்கிக் கொண்டாள். வேறொரு பெண்ணிடம் கொடுத்தபோது, இயேசு புத்தகத்தை வாங்கி எங்கள் வீட்டில் வைத்தால் எங்கள் சாமி அரிவாளை எடுத்துக் கொண்டு வெட்டவரும் என்றாள். உங்களை வெட்ட வருகிற சாமியை கும்பிடுகிறீர்களே, இயேசுகிறிஸ்து யாரையும் வெட்டுபவரல்ல, அவர் தன்னையே உலக மக்கள் அனைவருக் காகவும் சிலுவையில் பலியாக ஒப்புக் கொடுத்தார். அதனால் தான் நமக்கு பாவத்திலிருந்து மன்னிப்பு கிடைத்தது, பரலோகம் செல்லவும் வழி கிடைத்தது என்று சொன்னபோது, அந்தப் பெண் இயேசு ஏதோ பாவம் செய்து தான் அடிக்கப்பட்டார் என்று நினைத்திருந்தேன் இப்போது தான் நமது பாவங்களுக்காக அவர் தன்னை அடிக்கப்பட ஒப்புக் கொடுத்தார் என தெரிந்து கொண்டேன் என்றாள். மொத்தம் 1380 சுவிசேஷப் புத்தகங்கள், 900 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 8 : சகோதரிகள் :- மரியம்மாள், கிரேஸ் பத்மா, தெரசா பேபி, அபியேல் அந்தோணியம்மாள்.**

**கரும்பினாக்கோட்டை** என்ற கிராமத்தில் சுவிசேஷம் சொல்ல போன போது ஒருவன் எங்களிடம் இது என்ன புத்தகம் என்று கேட்டு இதையெல்லாம் இங்கு கொடுக்கக் கூடாது என்று நாங்கள் வைத்திருந்த கைப்பிரதிகள், கொடிகளை பிடுங்கி பக்கத்திலிருந்த குளத்தில் போட்டுவிட்டு, எங்களை மரியாதையாக போய் விடுங்கள் என்று கோபமாக பேசி துரத்தினான். நாங்கள் ஜெபத்துடன் அந்த இடத்தை விட்டு வேறு கிராமத்தில் சென்று ஊழியம் செய்தோம். மொத்தம் 1070 சுவிசேஷப் புத்தகங்கள், 900 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 9 : சகோதரிகள் :- ரோணிக்கம், அந்தோணிமேரி, அமிர்தம், சீலா.**

ஆலங்குடியை சுற்றியுள்ள கிராமங்களில் சுவிசேஷப் புத்தகங்கள் கொடுத்தோம். முழுவதும் இந்து மக்கள் இருக்கிறார்கள். ஆர்வமுடன் புத்தகத்தை வாங்கி னார்கள். சிலர் ஜெபிக்கும்படி வந்தார்கள்.

5 கிலோ மீட்டருக்கும் அதிகமாக நடந்து சென்று ஊழியம் செய்தோம். மொத்தம் 1050 சுவிசேஷப் புத்தகங்கள், 900 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

குழு 10 : **சகோதரிகள் :- கஸ்தூரி, சாந்தி, மரியாள், தெபோராள்.**

**கொத்தமங்கலம்** கிராமத்தில் சத்தியத்தை அறிவித்து வரும்போது சிலர் எங்களை இங்கு ஏன் வந்தீர்கள் ? மதப் பிரச்சாரம் செய்ய வந்தீர்களா ? உங்களை போலீஸில் ஒப்படைத்து பெரிய கலவ ரத்தை உண்டு பண்ணுவோம் என்று கூட்டமாக கூடி வந்து எங்களை எதிர்த்து தாறுமாறாகப் பேசினார்கள். அடுத்த கிராமத்திற்கு போய் ஊழியம் செய்தோம். நாய்கள் எங்களை கடிக்க வந்தது. ஆனாலும் கர்த்தர் எந்த சேதமும் வராமல் பாதுகாத்தார். மொத்தம் 1800 சுவிசேஷப் புத்தகங்கள், 900 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

குழு 11 : **சகோதரகள் :- தாஹாகனி, யோசுவா,ஸ்டீபன்ராஜ்,எபெனேசர்.**

**ஆவணம், நெடுவாசல், புல்லான்விடுதி** ஆகிய கிராமங்களில் அதிக எதிர்ப்புகள் இருந்தது. சிலர் எங்களை கூடிவந்து மதத்தைப் பரப்ப வந்தீர்களா ? என்று அடித்து விரட்டி னார்கள். ஆனாலும் சோர்ந்து போகாமல் ஊழியம் செய்ய கர்த்தர் கிருபை செய்தார். மொத்தம் 1055 சுவிசேஷப் புத்தகங்கள், 900 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம். **தேவனுக்கே மகிமை!**

**ஆலங்குடி தாலுகாவில்**
**விதைக்கப்பட்ட**
**சுவிசேஷ விதைகள்**
**நூறு மடங்கு**
**பலன் தரும்படியாக**
**கருத்தாய் ஜெபியுங்கள்.**

**2011 மார்ச் மாத**
**இயேசுவை விரும்புவோர் முகாம்**

மாவட்டம் : நாகை
யூனியன் : குத்தாலம்
நாள் : 26.03.2011
நேரம் : காலை 9 மணி

**கூடுமிடம்**

**பாஸ்டர் R.எபிதாஸ்**
**நல்ல மேய்ப்பன் மிஷன் சபை**
**பெத்தேல்புரம்,**
**ஓடை மதகு பஸ் ஸ்டாப்,**
**தேரிழந்தூர் - 609 808**
**குத்தாலம் தாலுகா,**
**நாகை மாவட்டம்.**
**செல் : 94882 14627**

**TVGM அறிமுகப்பணி**
**அலுவலக தேவை**
**மாருதி ஆம்னி வேன்**
**( விலை ரூ. 3 லட்சம் )**

*************

நாகர்கோவில் அறிமுகப்பணி அலுவலக சகோதரிகளின் அலைச்ச லையும், நேரத்தையும் மிச்சப்படுத்தி இன்னும் அதிகமான மக்களை சந்தித்து ஜெபித்து வர வசதியாக ஒரு ஆம்னி வேன் வாங்கி கொடுக்க வாஞ்சிக்கிறோம். இதற்காக ஜெபியுங்கள். தகுதியானவர்களிடம் அறிமுகம் செய்யுங்கள்.

P.T. கிறிஸ்டோபர்.
**TVGM** ஸ்தாபகர்
போன் : **0431 - 2607241**
செல் : **94435 44628**

## கிறிஸ்தவ தலைமைத்துவம் ( TASOL ) முன்னேற்றம்

கர்த்தருடைய கிருபையினால் TASOL சிறப்பாக செயல்பட்டு வருகின்றது. இதுவரை TASOL திட்டங்கள் மூலமாக பல மாணவர்கள் உதவித்தொகை பெற்று பலனடைந்து வருகிறார்கள். இந்த மாணவர்கள் அறிவிலும், ஞானத்திலும் வளர்ந்து வருங்கால தலைவர்களாக ஜெபியுங்கள்.

TASOL திட்டத்தின் முக்கிய நோக்கம் : மாணவர்களை நமது சமுதாயத்தில் ஆக்கப்பூர்வ தலைவர்களாக பயிற்சிவித்து, அவரவர் செய்யும் வேலை ஸ்தலத்தில் ஊழியம் செய்ய பயிற்சிவிப்பதே ஆகும்.

இத்திட்டத்தின் மூலம் நாங்கள் இந்தியாவில் பல மாநிலங்களை சேர்ந்த மாணவர்களை பயிற்சிவிக்க விரும்புகிறோம். மேலும் அவர்களை உயர்நிலை தலைமைத்துவத்திலும், விசேஷமாக கிறிஸ்தவ தத்துவத்திலும் நெறியிலும் நல்ல தலைவர்களை பயிற்றுவிக்க விரும்புகிறோம்.

நமது சமுதாயம் சந்திக்கப்பட சிறந்த முன்னேற்ற வழிகளை சிந்திக்க ஆரம்பிக்க வேண்டிய தருணம் இதுவே. நமது நாடு பல வழிகளில் முன்னேறிக் கொண்டிருக்கிறது. ஆகவே கிறிஸ்தவர்களாகிய நாம் சிறந்த வழிகளை பயன்படுத்தி நமது சமுதாயத்தை சந்திக்க வேண்டும். TASOL இந்த நோக்கத்தை நிறைவேற்ற மாணவர்களுக்கு உதவி செய்கிறது.

இந்த தரிசனம் நிறைவேற ஜெபிக்கவும், இந்த தரிசனத்தில் ஒரு அங்கமாக இருக்கவும் உங்களை ஊக்குவிக்கிறோம். இந்த உயர்ந்த தரிசனத்திற்கு மாதந்தோறும் கொடுத்து உதவிட உங்களை ஊக்குவிக்கிறோம். முதல் கட்டமாக தேவையுள்ள ஏழை மாணவர்களுக்கு பணஉதவி செய்து வருகிறோம்.

எதிர்காலத்தில் பல மாநிலங்களிலிருந்து மாணவர்கள் வந்து தங்கி படிக்கும் வசதிக்கேற்ப இத்திட்டத்திற்கு நிலம் தேவைப்படுகிறது. விசுவாசத்தில் சில ஏக்கர் நிலம் இத்திட்டத்திற்காக வாங்கியுள்ளோம். நிலத்திற்கான மொத்த விலை 30,00,000 ஆகும். மூன்று பேர் இத்திட்டத்திற்காக தாராளமாக ரூ.1,00,000 கொடுத்துள்ளார்கள். மேலும் ரூ.1,00,000 கொடுக்கக்கூடிய 27 பங்காளர்கள் தேவைப்படுகிறார்கள். ஜெபித்து இதை உங்கள் திட்டமாக கருதி உங்களால் எவ்வளவு இயலுமோ அவ்வளவு உதவுங்கள்.

இத்திட்டத்தில் ஆர்வமுள்ள உங்கள் நண்பர்கள், உறவினர்களிடம் இத்தரிசனத்தை பகிர்ந்து கொள்ளுங்கள்.

நமது சமுதாயத்தை மாற்றக்கூடிய தலைவர்களும், கிறிஸ்துவை பிரதிபலிக்கக்கூடிய தலைவர்களும் தேவைப்படுகிறார்கள். பழைய ஏற்பாட்டில் வாசிப்பதுபோல மோசே, யோசுவா போன்ற வலிமை மிக்க தலைவர்களை எழுப்ப நாம் நமது நேரத்தை, உழைப்பை, பணத்தை முதலீடு செய்ய வேண்டும்.

மேலும் கிறிஸ்தவர்களாகிய நீங்கள் சமுதாயத்துக்கு உதவும் வகையில் I.A.S. I.P.S. போன்ற பொதுசேவைகளில் உங்கள் பிள்ளைகளை அமர உற்சாகப்படுத்துங்கள், ஏனென்றால் இக்காலத்தில் இது போன்ற சேவைகளில் பணியாற்றுவது மிகவும் குறைவாக உள்ளது. உங்கள் பிள்ளைகள் இதுபோன்ற சேவைகளில் சேர முயற்சிக்கும்போது, நம் கர்த்தர் படிப்பிற்கான ஞானத்தையும், விசேஷித்த கிருபையையும் அருளுவார்.

கடைசியாக TASOL திட்டமானது வருங்காலத்தில் நிறைவேறக் கூடிய திட்டமல்ல. இது இப்பொழுதே நிறைவேற வேண்டிய தரிசனமாகும். ஆகவே நாங்கள் உங்களை இப்பொழுதே செயல்பட்டு இத்தரிசனத்திற்கு உதவிட கேட்டுக் கொள்கிறோம். மேலும் உங்கள் பிள்ளைகளையும் இத்தரிசனத்தில் பங்காளராக ஊக்குவிக்கிறோம். **ஜெபித்து பங்குபெறுங்கள்.**

**கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!**

...... *ஸ்டீபன் கிறிஸ்டோபர்.*

*****************

# கன்னியாகுமரி மாவட்ட TVGM அறிமுகப்பணி அலுவலகம் 2011 ஜனவரி மாத ஊழிய அறிக்கை

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் கடந்த 2010ம் ஆண்டில் ஜெபித்த அநேக ஜெபக்குறிப்புகளுக்கு இந்த ஆண்டின் ஆரம்பத்திலேயே தேவன் பதில் தந்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

இரண்டு புதிய சகோதரிகளை தேவன் ஊழியத்தில் இணைத்துள்ளார். ஜனவரி 8ம் தேதி குருந்தன்கோடு யூனியனுக்கான **"இயேசுவை விரும்புவோர் முகாம்"** திங்கள் சந்தையில் **"யாவே ஈரே நற்செய்தி ஊழியங்கள்"** சபையில் வைத்து நடத்த தேவன் உதவி செய்தார். அந்த ஊழியத்தை பொறுப்பெடுத்த **பாஸ்டர் ஜோசப் சுந்தர்** அவர்கள் **குருந்தன்கோடு ஊழியத்திற்கு பிறகு 10 புறமத குடும்பங்கள் ஸ்திரமாகவும், 3 குடும்பங்கள் இடையிடையே சபைக்கு வருவதாகவும் கூறினார்கள்.** அவர்களது ஊக்கமான பின்தொடர்பணியை கர்த்தர் கனப்படுத்தி, அவரது எல்லையை விரிவாக்கி ஆசீர்வதித்து வருகிறார்.

சுவிசேஷ ஊழியமும், **சங்கரன்புதூர், கண்ணன்பதி, தேவகுளம்** கிராமங்களில் பின்தொடர்பணியும் பல மாதங்களாகத் தடைபட்டுக் கொண்டே இருந்தது. ஜனவரி மாதம் பின்தொடர்பணி நேரில் சென்று செய்ய கர்த்தர் கிருபை செய்தார்.

பல மாதங்களாக தடைபட்டு வந்த ஊழியத்தையும் ஜனவரி மாதம் இரண்டு சகோதரிகளாக சேர்ந்து செய்ய கர்த்தர் கிருபை செய்தார். புதிய சபைகளில் அறிமுகப் பணிக்காக ஜெபித்துக் கொண்டிருக்கிறோம். புதிய வருடத்தில் அறிமுகப் பணியிலும், ஆத்தும ஆதாயத்திலும் மிகப் பெரிதான முன்னேற்றத்தையும், ஆசீர்வாதத்தையும் தருவார் என விசுவாசிக்கிறோம். **ஜெபமே ஜெயம்.**

**தேவனுக்கே மகிமை!**

**5 / 3A** கிரவுண் தெரு,
வாத்தியார் விளை,
நாகர்கோவில் – 629 001

கிறிஸ்துவின் பணியில்,
**ஷோபனா இவான்சலின்.**

செல்: **98658 26424** போன் : **04652 - 277251**

# நமது முஸ்லீம் சகோதர, சகோதரிகளுக்காக ஜெபியுங்கள் ! துதியுங்கள் !

முஸ்லீம் என்பது அரபு வார்த்தையாகும். மற்றொரு வார்த்தை இஸ்லாம் என்பதாகும். முஸ்லீம் என்றால் **"ஒருவர் அல்லாவுக்கு ( கடவுளுக்கு ) தன்னை அர்ப்பணிப்பது"** என்பதாகும்.

தற்காலிக முஸ்லீம்கள் தங்களை **'முகமதியர்'** என்று அழைக்கப்படுவதை விரும்புவது கிடையாது. ஏனென்றால் முகமதை வணங்குவதுபோல், வரக்கூடாது என்பதற்காக அதை விரும்புவதில்லை. முஸ்லீம் மக்கள் முகமதை வணங்குவதில்லை. ஆனால் அவருக்கு உண்மையாக இருக்கவும், அவரை பின்பற்றவும் செய்கிறார்கள்.

1300 வருடங்களுக்குப் பிறகும், இஸ்லாம் உலகத்திலேயே இரண்டாவது பெரிய மதமாக உள்ளது. 90 தேசங்களில் 90 கோடிக்கும் அதிகமாக முஸ்லீம்கள் உள்ளார்கள். இந்தியாவிலும் கூட, 12 % சதவீத மக்கள் முஸ்லீம் விசுவாசத்தையும், போதகத்தையும் பின்பற்றுகிறார்கள்.

1981 சர்வே படி 8 கோடி முஸ்லீம் மக்கள் இந்தியாவில் வசிக்கிறார்கள். ஜம்மு காஷ்மீரில் 64 % யூனியன் டெரிட்டரியான் லக்ஷாட்லீப் 95 % மேற்கு வங்காளம், கேரளா 20 % உத்திரபிரதேசம், பீகார் 15 % மற்ற யூனியன் டெரிட்டரியல் 10 % முஸ்லீம்கள் உள்ளார்கள்.

முஸ்லீம் சகோதரர்களுக்கு கிறிஸ்துவை அறிவிப்பது மெதுவாக செல்கிறது. மிகக் குறைந்த அறுவடை தான்.

மத்திய கிழக்கத்திய நாடுகளில், கடந்த நாட்களில் இஸ்லாம் மதம் வெகுவாக விரிவடைந்தது இதற்கு காரணம் மனமாற்றமல்ல. அரசியல் மற்றும் சரீர பிரகாரமான சலுகைகளின் நிமித்தமாகும்.

முஸ்லீம் தேசங்களில் ஆரம்ப நாட்களில் கிறிஸ்தவர்கள் 2வது வகுப்பு பிரஜையாக நடத்தப்பட்டார்கள். அவர்கள் கிறிஸ்தவ விசுவாசத்தில் இருக்கலாம். அதற்கு சிறிது ( Poll - Tax ) வரி கட்ட வேண்டும். உண்மையாக கிறிஸ்துவின் விசுவாசியாக இருந்தாலும்கூட அவர்களுக்கு எந்தவித முக்கியத்துவமும் வாழ்க்கையில் அளிக்கப்படவில்லை.

தற்காலத்தில் நமது முஸ்லீம் சகோதரர்கள் மத்தியில் ஒரு ஆவிக்குரிய தாகம் ஏற்பட்டுள்ளது. இஸ்ரேல் நாடு உருவாகிய பின்பு, இடம் பெயர்க்கப்பட்ட முஸ்லீம்களுக்கு, கிறிஸ்தவர்கள் உதவி செய்தார்கள். ( பள்ளிக்கூடம், மருத்துவமனைகள் மூலம்). வளைகுடா யுத்தத்தின்போது, அநேக முஸ்லீம் தேசங்கள், கிறிஸ்தவ நாடுகளுடன் இடைபட்டார்கள்.

வேதம் கூறுகிறது : எல்லா நாவுகளும் **"இயேசுகிறிஸ்வே கர்த்தர்"** என அறிக்கைப் பண்ணும்.

### *முஸ்லீம்கள் ஏன் கிறிஸ்தவர்களாகும் அனுபவத்தை அடைய கஷ்டப்படுகிறார்கள்?*

**முதலாவதாக**, சிறுவயதிலே முஸ்லீம் பிள்ளைகளுக்கு **'ஒரே ஒரு கடவுள்'** அவருக்கு சமமாக எதையும் ஒப்பிடக் கூடாது. அப்படிச் செய்தால் மன்னிக்கமுடியாத பாவம். இதற்கு மன்னிப்பே கிடையாது என்று போதிக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, மிக முக்கியமாக கிறிஸ்தவர்கள் 3 கடவுள்களை நம்பி, ஆராதனை செய்கிறார்கள் என போதிக்கிறார்கள். மூன்று பேர் ஒன்றுக்குள் இருக்க முடியாது என நினைக்கிறார்கள். கடவுள் ஒருவராக இருக்க வேண்டும். அல்லது மூன்று பேராக இருக்க வேண்டும். **ஆனால் மூன்றுபேர் ஒன்றாக இருக்க முடியாது.** இது தான் நமது முஸ்லீம் சகோதரர்கள், கிறிஸ்தவர்களாய் மாறுவதற்கு விருப்பமில்லாத முதல் காரணமாகும்.

**இரண்டாவதாக,** குரானில் இயேசுவின் கன்னிபிறப்பு, அவரது போதனை யாவும் தேவனுடைய வார்த்தையினால் உருவாக்கப்பட்டது.

**இயேசு தேவனுடைய வார்த்தை இல்லை.** தேவனுடைய வாயின் வார்த்தையினால் உருவாக்கப்பட்டார் என்பதாகும்.

முகமதுவும் இயேசுவை, ஒரு தீர்க்கதரிசியாக ஏற்றுள்ளார் ( ஆபிரகாம், ஏனோக்கு , மோசே, தாவீது ...) இயேசுவும் அநேக தீர்க்கதரிசிகளில் ஒருவர்.

இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டார். ஆனால் சிலுவையில் மரிக்க வில்லை. உயிரோடே மோட்சத்துக்கு சிலுவையிலிருந்தே எடுத்துக் கொள்ளப்பட்டார். அவரோடே சுவிசேஷத்தையும் மோட்சத்திற்கு எடுத்துக் கொண்டு சென்றார்.

தேவன் சில வெளிப்பாடுகளை இயேசுவுக்கு கொடுத்தார். ஆனால் அதை மறுபடியும் எடுத்துக் கொண்டார். விடுபட்ட வெளிப்பாடுகள் தவறானவைகள்.

ஆனால் முகமதுக்கு தெய்வீக உண்மை வெளிப்படுத்தப்பட்டது. இவர் தான் சரியான அளவுகோல்.

**மூன்றாவதாக,** முஸ்லீம்கள் குடும்ப உறவை மிக முக்கியப்படுத்து கிறார்கள். ஒருவர் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டால்கூட, குடும்ப உறவின் பட்டியலிருந்து அவர்களை நீக்கி விடுகிறார்கள். ஆதலால் பயப்படுகிறார்கள்.

**நான்காவதாக,** கிறிஸ்தவர்கள் மேல்நாட்டு மதத்தை சார்ந்தவர்கள் என பெயர் ஆகிவிட்டது.

சில மேல்நாட்டு பழக்க வழக்கங்களை கிறிஸ்தவர்கள் கைக்கொண்டதால், முஸ்லீம் சகோதரர்கள் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளவில்லை.

பன்றி இறைச்சியை கிறிஸ்தவர்கள் சாப்பிடுவதால், முஸ்லீம் நண்பர்கள் கிறிஸ்தவத்தை விரும்பவில்லை.

***முஸ்லீம்கள் சகோதரர்களின் 3 முக்கிய நம்பிக்கை***

**1. இரண்டாம் வருகை :** மேரியின் மகனாகிய இயேசு **இரண்டாவது முறை** தீர்க்கதரிசியாக அல்ல, நீதியுள்ள நியாயாதிபதியாக வருவார்.

**2. கடைசிநாள் நியாயத்தீர்ப்பு :** இஸ்லாமியருடைய 6 நம்பிக்கையில் 4 வது நம்பிக்கை **"கடைசிநாளும் நியாயத்தீர்ப்புமாகும்"**. அந்த நாள் கடவுளுக்கு மட்டுமே தெரியும். அவரவரர் செய்கைக்கு நியாயத்தீர்ப்பு கிடைக்கும்.

**3. ஜெபம் – ஆராதனை :** ஐந்து வித்தியாசமான நேரங்களில் ஜெபிக்க வேண்டும். சகோதர ஐக்கியத்திற்காக மசூதியில் கூடுகிறார்கள்.

என் அன்பு சகோதர, சகோதரிகளே நம்முடைய முஸ்லீம் சகோதரர்களை பற்றிய மேற் கண்ட காரியங்களை மனதில் கொண்டு ஜெபிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**ஏனெனில், கிறிஸ்துவும் முஸ்லீம்களுக்காக பாடுபட்டு, அவர்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி அவர்களுக்கு மாதிரியை வைத்துப் போனார்.( 1பேதுரு 2 : 21 தழுவியது ). தேவனுக்கே மகிமை!**

## இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

**உன் ஊழியத்தை நிறைவேற்று.** 2 **தீமோ.** 4 : 5

தமிழகத்தில் அனைத்து கிராமங்களிலுமுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட **1 கோடி குடும்பங்களுக்கு** "100 - **கிராம ஊழியம்**" திட்டத்தின் மூலம் '**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**' இலவசமாக வழங்கி **இயேசுவை** அறிவித்தல்.

# திருப்பூர் மாவட்டம் - அவினாசி யூனியன்
# 100 - கிராம ஊழியம்

**நோக்கம்:** 2011 **மார்ச்** 14 திங்கள் காலை 9 மணி முதல் **மார்ச்** 18 வெள்ளி இரவு 10 மணி முடிய **அவினாசி யூனியன் கிராமப் பகுதிகளில்** "100 - TVGM கிராமங்களில்" 10,000 வீடுகளில் இயேசுவை அறிவித்து "**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**" இலவசமாக வழங்கி வாஞ்சையுள்ள ஆத்துமாக்களின் முகவரிகளை சேகரித்து பின்தொடர்பு பணி செய்து, அருகிலுள்ள சபைகளில் இணைத்து விடுதல் ஆகும்.

**உபவாச ஜெபம்** : 2011 **மார்ச்** 14 திங்கள் காலை 9 - 1 மணி

**கடைசி நாள் ஜெபம்** : 2011 **மார்ச்** 18 வெள்ளி இரவு 7 - 10 மணி

( 2011 **மார்ச்** 14 -18 **தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி** )

**உபவாச ஜெபம் நடைபெறும் இடம்**

**சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர்,** TVGM
C/o. **ஏ.ஜி. சர்ச்**
**எம்.ஜி.ஆர் நகர் (வாட்டர் டேங்க் அருகில்)**
**V.G.V. பஸ் ஸ்டாப், அவினாசி மெயின் ரோடு,**
**T.M. பூண்டி போஸ்ட், திருப்பூர் - 641 652.**
**செல்: 99943 36841.**

உதவி செய்ய முன் வந்த Pastor Y. **ஜீவத்துரை** அவர்களுக்கு நன்றி!

**தகுதி** : ஆலயமில்லாத கிராமங்களில் 5 நாள் தங்கியிருந்து, சுவிசேஷம் அறிவித்து கிராமத்தில் சாப்பிட்டுக் கொண்டு ஊழியம் செய்ய, அர்ப்பணித்த 18 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

**பிரயாணப்படி** : தமிழ்நாட்டிலிருந்து ரூ. 5 செலுத்தி, அனுமதி தபால் பெற்று வருபவர்களுக்கு போக, வர குறைந்த பஸ் கட்டணமும், உணவும் வழங்கப்படும். வேறு உதவித்தொகையோ, அன்பளிப்போ கிடையாது.

**முக்கிய அறிவிப்பு** : 1. இது ஒரு கௌரவ, தியாக சேவையாகும். **எக்காரணத்தை முன்னிட்டும் நஷ்ட ஈடு வழங்கப்படமாட்டாது.**

2. இயேசு கிறிஸ்துவின் கடைசி கட்டளையை நிறைவேற்ற ஆத்தும தரிசனம் பெற்றவர்கள் மட்டும் 100 - கிராம ஊழியத்திற்கு வாருங்கள்.

**சகல தொடர்புகளுக்கும்** : சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர்,
**100 - கிராமம்,** திருச்சி - 620 102. Ph : **0 - 431 - 2607241**

**தினமும் ஒரு நிமிடமாவது ஜெபியுங்கள்.**

**"நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது". யாக். 5:16**

# தினசரி ஜெபக்குறிப்புகள்

**திங்கள்:** TVGM Trust –க்கு ஐந்து வருடங்களாக FCRA க்கு முயற்சிக் கிறோம். ஜெபித்து வருகிறோம். இதுவரையிலும் கிடைக்க வில்லை. கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைக்கவும், அதிகாரிகளின் கண்களில் தயவு கிடைக்கவும் ஜெபியுங்கள்.

**செவ்வாய்:** TASOL–க்கு 12A, 80G ஆர்டர்கள் கிடைக்க ஜெபியுங்கள். அத்துடன் நிலங்களுக்கு பட்டா கிடைக்க ஜெபியுங்கள். ஒரு வருடமாக நமக்காக தாலுகா ஆபிஸ்க்கு அலைந்து உதவி செய்யும் சகோ. சேவியர் ( பாரப்பட்டி) அவர்களுக்காக தேவனைத் துதியுங்கள்.

**புதன் :** TVGM Social Service–மூலம் நடைபெறும் சிறுவர் இல்லத்திற்கு சமூக சேவை அங்கீகாரம் சென்னை யிலிருந்து கிடைக்க ஜெபியுங்கள். தாசில்தார் லைசன்ஸ் கிடைக்க ஜெபியுங்கள்.

**வியாழன் :** TVGMதலைமை அலுவலகத்திற்கு ஊழிய வாஞ்சை யுள்ள அட்மினிஸ்டிரேட்டர், Computer Staff, அக்கவுண்டண்ட், டிரைவர், வார்டன் குடும்பம், வாட்ச்மேன் ஆகியோர் கிடைக்க ஜெபியுங்கள்.

**வெள்ளி : "இயேசுவே வழி"** ஊழியத்தின் மூலம் காங்கேயம் / ஈரோடு மத்தியிலுள்ள வானவராயன் நல்லூர் கிராமத்தில் ஊழியம் செய்து, கட்டப்பட்டுள்ள ஆலயத்தில் ஞாயிறு ஆராதனை நடத்தவும் தரிசனம் பெற்ற ஒரு குடும்பத்தினரை கர்த்தர் கொடுக்கும்படியாக ஜெபியுங்கள்.

( தொடர்பு :**பாஸ்டர் ராஜகுமார், பூதபாண்டி,** செல் : 944282823)

**சனி :** சகோ. P.T. கிறிஸ்டோபர் , சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர் மூலம் அநேக மக்கள் உள்நாடுகளிலும், வெளிநாடுகளிலும் ஆத்தும தரிசனம் பெற்று சபைகளை கட்டி எழுப்பவும், தங்கள் பகுதிகளில் சுவிசேஷ ஊழியம் செய்யவும் ஜெபியுங்கள்.

ஸ்ரீலங்கா வில்லேஜ் காஸ்பல் மிஷன், ஒரிஸா வில்லேஜ் காஸ்பல் மிஷன் மற்றும் பல நாடுகளில் ஆத்தும ஆதாயம் செய்ய பயிற்சியளிக்கப்பட்ட ஒவ்வொரு சபைகளையும் கர்த்தர் அனல் மூட்ட ஜெபியுங்கள்.

**ஞாயிறு :** தேவனுடைய நாம மகிமைக்காக உழைக்கும் ஒவ்வொரு குடும்பத்தையும் கர்த்தர் ஆசீர்வதிக் கும்படியாகவும், நிர்வாகஸ்தர்களுக்கு தேவையான ஞானத்தை கட்டளை யிடும்படியாகவும் ஜெபியுங்கள்.

**TVGM <u>தலைமை அலுவலக முகவரி</u>**

**BRO.STEPHEN CHRISTOPHER**
**MANAGING TRUSTEE**
**TAMIL VILLAGE GOSPEL MISSION**
**1OO-VILLAGE,**
**Veeranginallur Road,**
**SOMARASAMPETTAI ( Hospital Stop)**
**TRICHY - 620 102. TAMIL NADU, INDIA.**
**STD Ph : 0- 431 - 2607241 Email : 100village@tvgm.org**


**கர்த்தரால் ஏவப்படுபவர்கள் TVGM ஊழியங்களுக்கு**
**டிராப்ட் , செக், போஸ்டல் ஆர்டர், M.O அனுப்ப வேண்டிய முறை**

1. **TAMIL VILLAGE GOSPEL MISSION (100-** கிராம ஊழியம், ஜெபவீடு)
2. **T.V.G.M. PUBLICATION** ( பத்திரிக்கை சந்தா, அச்சகம் அமைக்க)
3. **TASOL (** நிலம் வாங்குவதற்கும் மற்றும் கல்வி நிதி )
4. **T.V.G.M. SOCIAL SERVICE** சிறுவர் இல்லம், ஏழை, எளியவர்கள் உதவி ( இதற்கு மட்டும் 80 G வரிவிலக்கு உண்டு )

**குறிப்பு :Bank Account** நம்பர் தேவைப்பட்டால் தயவுசெய்து உங்கள் நோக்கத்தை குறிப்பிட்டு எங்களுக்கு ஈமெயில் / தபால் எழுதவும்.

**குறிப்பு :Bank To Bank அனுப்பும்போது உங்கள் முழு முகவரி மற்றும் தொலைபேசி எண், காணிக்கை அனுப்புவதின் நோக்கம் யாவையும் TVGM தலைமை அலுவலக முகவரிக்கு தபால் அல்லது எங்கள் Email: 100village@tvgm.org மூலம் தெரியப்படுத்தி உதவுங்கள்.**

## Website : www.tvgm.org

தினசரி வாக்குத்தத்தம், மாதாந்திர வாக்குத்தத்த செய்தி
,**'100 கிராம ஊழியம்'** அனுபவ சாட்சிகள்,
TVGM Documentary, TVGM சிலுவைக்கொடி பாடல்கள்,
மற்றும் முக்கிய நிகழ்ச்சிகள் வெளியிடப்பட்டு வருகிறது.
**தவறாமல் பாருங்கள் ! ஜெபியுங்கள் !**


Owned by TVGM Publication Trust and Published by Stephen Christopher from TVGM Publication Trust 4/274 Hundred village, Somarasampettai, Trichy - 620 102 printed by him at TVGM Publication Printers, C/o. TVGM Publication Trust, 4 /274 Hundred Village, Somarasampettai, Trichy 620102.

**Editor : Mr. Stephen Christopher**

REG. NEWS PAPER R.N.I. Number : TNMUL / 2000 / 4011
HUNDRED VILLAGE MINISTRY ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி
POSTAL REGISTRATION NUMBER :TRY / 013 / 2009 - 2011
Posting Date 25th at H.P.O. Trichy.



## TVGM **சிறுவர் இல்லம்**

நன்றி

**2011 ஜனவரி மாதத்தில் சிறப்பு விருந்தளித்தவர்கள் :**

சகோதரி லௌஜினி,
சகோதரி ஜாய், சகோ.நடராஜன்,
சகோ. சாந்தப்பன், கோவிந்தராஜ்

**இனிப்பு வழங்கியவர்கள்:**

சகோ. ஞானபிரகாசம், சகோதரி லதா.



## பார்வையற்றோர் பள்ளி - புதுக்கோட்டை

20 பிள்ளைகளுக்கு இனிப்பு வழங்கி, **கிறிஸ்மஸ் செய்தி** அளிக்கப்பட்டது. ஒழுங்கு செய்து தந்த சகோ. **ராஜா** , சகோ. **ஜான் சுப்பு** ஆகியோருக்கு நன்றி.

**தேவனுக்கே மகிமை!**

**To**

**Return Requested:** TVGM ,
100 - Village,
Somarasampettai, Trichy - 620 102. India.